LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2005/2006 (வெளிவாரி)
(ஏப்ரல் 2008)

TL 101 தமிழ் இலக்கிய வரலாறும் பாடநூல்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

1. சங்க இலக்கியங்களின் பொதுப்பண்புகளை எடுத்துக்கூறி அவை அதற்கடுத்த காலப்பிரிவு இலக்கியங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ள முறைமையினை விளக்குக.

2. கி.பி. 600 – 900 காலப்பிரிவு இலக்கியங்கள் காவியங்களுக்கு எவ்வகையில் வழிகாட்டியுள்ளதென ஆராய்க?

3. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்களை எடுத்துக்கூறி அவை அக்கால இலக்கிய வளர்ச்சியில் ஏற்படுத்திய மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.

4. தமிழ் சிறுகதையில் வ.வே.சுஐயர், புதுமைப்பித்தன், லா.ச.ரா ஆகியோர் ஏற்படுத்திய மாற்றங்களை விளக்குக.

## பகுதி – II

5. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

துறுகலயலது மாணை மாக்கொடி
துஞ்சு களிறிவரும் குன்ற நாடன்
நெஞ்சு களனாக நீயலன் யானென
நற்றோள் மணந்த ஞான்றை மற்றவன்
தாவாவஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயினானே

i. பாடலின் பொருளை எளிய நடையில் எழுதுக.
ii. பாடலைப் பாடியவர் யார்?
iii. யாருடைய கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது?

6. ஆய்ச்சியர் குரவை முதல் வழக்குரை காதையீறாகவுள்ள பகுதியை சிலப்பதிகாரத்தின் உச்சக்கட்டம் எனலாமா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

7. கும்பகர்ணன் வதைப்படலத்தில் கம்பனின் கவிதை ஆளுமை வெளிப்படுமாற்றை விளக்குக.

8. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

    1. பாரதியார் கவிதைகளில் சமூக விடுதலை.
    2. நீலாவணனின் கவிதைகளில் கிழக்கிலங்கைச் சமூகவாழ்வு

***********